**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 15.06.2026**

**OS.173/2021**

**வா.சா.2 திரு.தாதன்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் சிக்களூர் கிராமத்தில் உள்ளது. அது எத்தனை ஏக்கர் என்றால் 4 ஏக்கர். மேட்டுநிலமா அல்லது தண்ணீர் பாயக்கூடிய நிலமா என்றால் மேட்டுநிலம். அந்த நிலத்தின் கிழக்கு பக்கம் யார் நிலம் நிலம் என்றால் பருகூர் காரர் மாந்தோப்பு உள்ளது, அவர் பெயர் தெரியவில்லை. மேற்கே யார் நிலம் உள்ளது என்றால் ராஜி, அமிர்தம், கிருஷ்ணன் நிலம் உள்ளது. வடக்கே யார் நிலம் உள்ளது என்றால் என் நிலம் உள்ளது. தெற்கே யார் நிலம் உள்ளது என்றால் தெற்கே அமிர்தம், ராஜி, கிருஷ்ணன் நிலம் உள்ளது. வழக்கு நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.273. வழக்கு சொத்து புருடையன் என்பவர் நிலங்களை சீர்திருத்தம் செய்து அனுபவித்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் நான் அவர்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். புருடையன் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை, இறந்துவிட்டார். மாரியம்மாள் என்பவர் யார் என்றால் புருடையனின் மனைவி. புருடையனுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் ராஜி, கிருஷ்ணன், அமிர்தம் ஆகியோர்.

2. நடுப்பையன் என்கின்ற சின்னபையன் யார் என்றால் அந்த புருடையன் பெயர்தான் நடுப்பையன் என்கின்ற சின்னப்பையன். நடுப்பையன் என்கின்ற சின்னபையன் என்கின்ற புருடையன் வாதிகளுக்கு தாத்தாவா அல்லது அப்பாவா என்றால் அப்பா. நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிலத்தை அளக்கும்போது நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு அளந்து எல்லோருக்கும் பட்டா கொடுத்தார்களா என்றால் ஆமாம். இந்தவழக்கு நிலத்திற்கு யார் பெயருக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் புருடையன் மனைவி மாரியம்மாளுக்கு பட்டா கொடுத்தார்கள்.

3. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் நடுப்பையன் என்கின்ற சின்னபையன் மனைவி மாரியம்மாள் என்பதற்கு பதிலாக வேடியப்பன் மனைவி மாரியம்மாள் என்று சொல்லியுள்ளேன் அது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்த்ல் சர்வே எண்.275/3 ல் மாரியம்மாளும் அவரது கணவர் நடுப்பையன் என்கின்ற சின்னபையன் அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நடுப்பையன் என்கின்ற சின்னபையன் எத்தனை வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் 30 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். நடுப்பையன் என்கின்ற சின்னபையனின் வாரிசு சான்றிதழை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நடுப்பையன் என்கின்ற சின்னபையனுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் ராஜி, கிருஷ்ணன், அமிர்தம் ஆகியோர்தான்.

4. வழக்கு சொத்து சிக்களூர் கிராமத்தை சேர்ந்த வேடியப்பன் மனைவி மாரியம்மாளுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. வேடியப்பன் மனைவி மாரியம்மாளும் சிக்களூரில் இருந்தார் என்றால் சரிதான். அந்த மாரியம்மாள் சமீபத்தில் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சக்திவேல் திருப்பதியின் பாட்டிதான் வேடியப்பன் மனைவி மாரியம்மாள் அந்த சக்திவேல், திருப்பதிக்கு தான் சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல. நரிப்பள்ளியை சேர்ந்த சேட்டு மகன் சக்திவேல் எனக்கு தெரியுமா என்றால் அவரை எனக்கு தெரியாது. சிவலிங்கம் மகன் திருப்பதியை தெரியுமா என்றால் அவரை எனக்கு தெரியாது. மேற்படி சக்திவேல், திருப்பதியின் பாட்டிதான் மாரியம்மாள் என்றால் அது எனக்கு தெரியாது.

5. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் மாரியம்மாள் மற்றும் அவரது கணவர் வேடியப்பன் ஆகியோர் மோசடி ஆவணத்தை ஒருவர் பெயருக்கு ஏற்படுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன் யார் பெயருக்கு அவ்வாறு ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி எதுவும் சொல்லவில்லை. சமீபத்தில் எப்போவாவது சர்வேயர் வந்து அளந்தாரா என்றால் இல்லை. சாமுவேல் சந்திரசேகரன் நிலத்தை கிரையம் செய்துகொண்டார் என்று சொல்வதும் சர்வேயர் மூலம் அளவீடு செய்தார் என்று சொல்வதும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் எப்போதாவது பிரச்சனை ஏற்பட்டதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக வாதிகள் வருவாய் துறையினரான VAO,

தாசில்தார், கேட்டாட்சியரிடம் மனு அளித்தது குறித்து தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

6. வாதிகள் தாவா சொத்தை யாரிடமும் விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் வாரிசுரிமை அடிப்படையில்தான் நிலத்தின் பாத்தியதையை கோருகிறார்கள் என்றால் சரிதான். வாதிகள் சக்திவேல், திருப்பதியும் பைசல் பேசியதாகஎனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை, சக்திவேல், திருப்பதியை யார் என்றே தெரியாது. எனக்கு வழக்கு சொத்து பற்றி எதுவுமே தெரியாது, வாதி கிருஷ்ணன் கேட்டுக்கொண்டதற்காக தெரியாது சங்கதியை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்தவகையில் வாதிகள் பெயருக்கு பட்டா, சிட்டா ஏதாவது பெற்றார்களா என்றால் வந்தது தான் வீடு எரியும்போது எரிந்துவிட்டது. வாதிகள் பெயரில் தாவா சொத்தை அவர்கள் பெயர் உள்ளதா என்றால் இருக்கலாம். நான் வாதிகள் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் அதனால் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.15 16:16:43 +0530